# மலைப் பிரசங்கம்

## பாடம் -1

## மத்தேயு 5:1-6

## வருகிற சிந்தைகள்

கேட்பொலி பாடம்: மலைப் பிரசங்கம் பாடம் 1 & 2

**நோக்கம்:** தேவனை கிட்டி சேருவதற்கு இயேசு கற்று கொடுத்த முதல் நான்கு பாக்கியங்களையும், மனதில் தோன்றுகிற “வருகிற” சிந்தைகளையும் புரிந்து கொள்ளுதல்.

*அவர் திரளான ஜனங்களைக் கண்டு மலையின்மேல் ஏறினார்; அவர், உட்கார்ந்த பொழுது, அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்தார்கள். அப்பொழுது அவர் தமது வாயைத் திறந்து அவர்களுக்கு உபதேசித்துச் சொன்னது என்னவென்றால்:*

*ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது.*
*துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதலடைவார்கள்.*
*சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்து கொள்ளுவார்கள்.*
*நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்.*
*-மத்தேயு 5:1-6*

எட்டு பாக்கியங்கள் அல்லது எட்டு ஆசீர்வாதமான சிந்தைகள் என்று கூறப்படுகின்ற எட்டு சிந்தைகளையும் இயேசு தன்னுடைய சீடர்களுக்கு கற்பிப்பதின் மூலம் ஆரம்பிக்கின்றார். பாக்கியங்கள் ஏனெனில் ஒவ்வொன்றும் “பாக்கியவான்கள்” என்ற வார்த்தையுடன் முடிவடைகிறது. இந்த சிந்தைகள் ஒவ்வொன்றையுமுடைய சீடர்களை இயேசு ஆசீர்வதிப்பதாக வாக்கு கொடுக்கின்றார். பாக்கியவான்கள் என்ற இந்த வார்த்தை “மகிழ்ச்சி”, “ஆவிக்குரிய செழிப்பு”, அல்லது “கிருபையின் நிலையில் இருத்தல்” என்று பொருள்படும். அந்த சீடனுடைய வாழ்க்கையில் இந்த ஒவ்வொரு சிந்தையும் எப்படிப்பட்ட ஆசீர்வாதங்களை எவ்விதமாக கொண்டுவரும் என்பதுடன் ஒரு வாக்குத்தத்தத்தையும் உள்ளடக்கியுள்ளது.

இந்த எட்டு ஆசீர்வாதமான சிந்தைகளும் எண்ணங்களின் தோற்றம் அல்லது சிந்தனை ஓட்டத்தின் பாதையை ஒருமுகப்படுத்தி, இயேசுவின் சீடனுடைய நடக்கையில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இயேசுவின் சீடர்கள் வாழ்க்கையை, இவ்விதமான சிந்தையுடன் பார்க்கும் போது, மலை அடி வாரத்தில் கூடி வந்திருக்கிற ஏராளமான மக்கள் சந்திக்கின்ற பலவிதமான வேதனைகளை இயேசுவின் மூலமாக தீர்க்க உதவ கூடியவர்களாக இருக்க முடியும் என்பதை இயேசு இந்த சிந்தைகளைக் குறித்து போதித்த சந்தர்ப்பம் தெரிவிக்கின்றது.

இந்த எட்டு பாக்கியங்களும் ஒவ்வொன்றும் நான்கு பாக்கியங்களடங்கிய இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. முதல் நான்கு பாக்கியங்களும், நாம் தேவனிடமாக வருவதற்கு நம்மை உட்படுத்துகின்ற சிந்தைகளையும் - இயேசுவைத் தேடி மலையின் மேல் ஏறி செல்வதைப் போல நமக்கும் தேவனுக்கும் இடையிலான உறவையும் - இரண்டாவது பகுதியிலுள்ள நான்கு பாக்கியங்களும் தேவனுக்காக செயல்படுவதற்கான சிந்தைகளையும் - மலையினின்று கீழே இறங்கிச் செல்வது போலவும் பிறருடனான நமது உறவை கூறுகின்றது.



இன்று இயேசுவின் சீடர்களாக, நாம் ஒருபோதும் பிரச்சனைகளின் ஒரு பகுதியாக இல்லாமல், பிரச்சனைகளுக்குரிய தீர்வுகளின் பகுதியாக இருக்க வேண்டுமென்று தீர்மானித்த பின்பு, நாம் செய்ய வேண்டிய முதலாவது காரியம் என்னவென்றால் இந்த சிந்தைகளை நன்றாக கற்றுக் கொண்டு, நம்முடைய அனுதின வாழ்க்கையில் இதன்படி வாழ வேண்டும் என்று தீர்மானிக்க வேண்டும். நாம் இவ்விதமாக செயல்படும்போது தேவன் நம்மை ஆசீர்வதிப்பதாக வாக்கு கொடுத்திருக்கிறார்.

## ஆவியில் எளிமையுள்ளவர்கள்

### கேட்போலி பாடம்: மலைப் பிரசங்கம் பாடம் 3

முதலாவது பாக்கியம், யோவான் ஸ்நானகனிடம் யூத தலைவர்கள் கேட்ட கேள்வியுடன் தொடர்புடையதாக இருக்கின்றது. “உம்மைக் குறித்து என்ன சொல்லுகிறீர்?” (யோவான் 1:22). நம்மைக்குறித்து நம்மிடமே சரியான எண்ணம் காணப்படவில்லை என்றால், நாம் ஒருபோதும் நம்முடைய தேவனின் தீர்வாக இருக்க முடியாது. “ஆவியில் எளிமையுள்ளவர்கள்” என்பதை வேத வல்லுநர்கள் “ஆவியில் நொறுங்குண்டவர்கள்” என்றும் மொழி பெயர்க்கலாம் என்று கூறுகின்றார்கள். அதாவது இந்த சிந்தை நொறுக்கப்படுவதை விவரிக்கின்றது - பிரத்தியேகமான ஊழியத்திற்காக, தேவனால் அழைக்கப்பட்டு ஆயத்தப்படுத்தப்பட்டவர்களுடைய வாழ்க்கையில் நாம் காண்கின்றவைகள்.

1. முதலாவது பாக்கியம் ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள். பரலோகராஜ்யம் அவர்களுடையது. (மத்தேயு 5:3)
   தெரிந்தெடு: (பூமி, பரலோகராஜ்யம், எளிமை, ஆவி, செல்வந்தன்)



2. சரியா? தவறா?
   தங்களுக்குறியவற்றை விற்று தரித்திரராக வேண்டுமென்று இயேசு தன்னுடைய சீடர்களுக்கு போதிக்க முயற்சிக்கிறார்.

3. சரியா? தவறா?:
   இந்த பாக்கியத்திற்கு கொடுக்கப்பட்ட வாக்குதத்தமே, இயேசுவை சொந்த இரட்சகராகவும் கர்த்தராகவும் ஏற்றுக் கொள்வதற்கும் கொடுக்கப்பட்டுள்ளது.

4. கீழே கொடுக்கப்பட்டவைகளில் எவைகள் “ஆவியில் எளிமையுள்ளவர்கள்” என்பதற்கு உதாரணமாக கொடுக்கப்பட்ட சிந்தைகள்? (பொருந்துபவற்றை கோடிடவும்)
   அ) தேவனைப் பிரியப்படுத்த நாம் எவ்வளவு நல்லவர்கள் என்று காண்பிக்க முயலுவது.
   ஆ) ஆலயத்தில் உயர் பதவியை விரும்புவது.
   இ) தேவனிடமும் பிறரிடமும் பாவங்களை அறிக்கை செய்வது.
   ஈ) அந்தஸ்து பார்ப்பதை விட்டு சேவை செய்வதை தெரிந்து கொள்ளுதல்
   உ) பிறரை குற்றம் சாட்டுவது

5. மோசேயோடு கூட வேதாகமத்தில் காணப்படுகின்ற வேறு ஒருவரை “ஆவியில் எளிமையுள்ளவர்கள்” என்பதற்கு உதாரணமாக கூறவும்.

6. பிலிப்பியர் 2:5-11ன் படி இயேசு கிறிஸ்துவின் சிந்தையே நம்மில் காணப்பட வேண்டும். உங்களிடம் வேதாகமம் இருக்குமென்றால் அந்த பகுதியை வாசித்துவிட்டு இயேசுவைக் குறித்து விவரிக்கின்ற சிந்தைகளை கோடிடவும்.

| | |
|---|---|
| வெற்றியை மையமாக கொண்ட | பெருமை |
| சுயம் | கீழ்ப்படிதல் |
| அடிமையைப் போல | தாழ்மை |
| எதிர்க்கும் தன்மை | பேராசை |

7. “ஆவியில் எளிமையுள்ளவர்கள்” என்பது ஒரே வார்த்தையில் தாழ்மை என்று கூறப்பட்டுள்ளது.
   கீழே கொடுக்கப்பட்டுள்ள பகுதிகளை வாசித்து, கேள்விக்கு சரியான பதிலை கோடிடவும்.

   1பேதுரு 5: 5-7 வசன ங்களின்படி யாருக்கு தேவன் கிருபையளிக்கிறார்?
   அ) பெருமையுள்ளவர்கள்
   ஆ) கடின உழைப்பாளிகள்
   இ) உண்மையுள்ளவர்கள்
   ஈ) தாழ்மையுள்ளவர்கள்

   ரோமர் 12:3 நாம் நம்மைக் குறித்து எவ்விதமாக எண்ண வேண்டும்?
   அ) உயர்வாக
   ஆ) தெளிந்த புத்தியுள்ளவர்களாக
   இ) குற்றஞ்சாட்டுபவர்களாக
   ஈ) நம்மைக் குறித்தே எண்ணாதவர்களாக

8. உங்கள் வாழ்க்கையின் ஏதேனும் ஒரு பகுதியில் நீங்கள் ஆவியில் எளிமையுள்ளவர்களாய் காணப்படாத நிலை உண்டா? அப்படியானால் அது எந்த பகுதி? அந்தப் பகுதியில் நீங்கள் எவ்விதமாய் ஆவியில் எளிமையுள்ளவர்களாய் நடந்து கொள்ள முடியும் என்பதைக் குறித்து விரிவாக எழுதவும்.

...........................................................................................................................

...........................................................................................................................

...........................................................................................................................

## துயரப்படுகிறவர்கள்

### கேட்பொலி பாடம்: மலைப் பிரசங்கம் பாடம் 4

துயரப்படுவதற்கான அறிகுறிகள் காணப்பட்டால், தங்கள் விசுவாசம் மங்கிப்போனதாக சில விசுவாசிகள் தவறான எண்ணங்கொண்டவர்களாக இருக்கிறார்கள். இந்த பாக்கியம் துயரப்படுவதை ஆதரிப்பது மாத்திரம் அல்ல - அதனை ஒரு ஆசீர்வாதத்தோடு தொடர்பு படுத்தியுள்ளது. இழப்பினால் துயரம் உண்டாவது சாதாரணமானதுதான். அந்த இழப்புகளிலிருந்து நாம் பல காரியங்களை கற்று கொள்ள வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். நமது துயரங்களை உபயோகித்து மூன்று விதங்களில் தேவன் நம்மை வழிநடத்த நாம் இடம் கொடுக்க வேண்டும். முதலாவது, துயரம், நாம் வாழ்க்கையை குறித்த சரியான கேள்வியை கேட்க உதவுகிறது. இரண்டாவதாக, அது, தேவன் தருகின்ற பதில்களை நாம் கேட்க உதவி செய்கிறது. மூன்றாவதாக, நமது இரட்சிப்போடு கூட தேவன் நமக்கு தருகின்ற ஆசீர்வாதங்களையும் நாம் பெற்று கொள்ள உதவி செய்கிறது.

1. இரண்டாவது பாக்கியம் “துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள் ; அவர்கள் ஆறுதலடைவார்கள்” மத்தேயு 5:4
(தெரிந்தெடு: சிரிப்பு, ஆறுதல், துயரம்)
அடுத்து வருகின்ற மூன்று கேள்விகளுக்கும் சரியான பதிலை கோடிடவும்

2. இயேசு துயரத்தை குறித்து பேசும்போது, அவர் குறிப்பிட்ட துயரம்
   அ) மரணத்தினாலுண்டான துயரம்
   ஆ) பாவத்தினாலுண்டான துயரம்
   இ) உலகத்தின் நிலையை பார்த்து ஏற்பட்ட துயரம்
   ஈ) மேலே கூறிய யாவும்

3. யோவான் 11:35-36 வசனங்களின்படி இயேசு ஏன் அழுதார்?
   அ) இயேசு லாசருவை அதிகமாக நேசித்தார்
   ஆ) லாசரு மரணமடைவதற்கு முன்பாகவே தான் அங்கு வந்திருக்க வேண்டும் என்று இயேசு விரும்பினார்.
   இ) மரியாளின் அவிசுவாசத்தை குறித்து
   ஈ) தானும் மரணமடைய போகிறோம் என்பதை அறிந்ததினால்

4. துயரப்படுகிறவர்களுக்கு இயேசு கொடுத்த வாக்குதத்தம்
   அ) தங்களுக்கு அது தேவையற்றது என்பதை தெரிந்து கொள்ள வேண்டும்.
   ஆ) ஒரு நாளில் அவர்களுடைய விசுவாசம் பலப்படும்
   இ) உயிர்த்தெழுதலின் நம்பிக்கையை ஒருபோதும் புரிந்து கொள்வதில்லை
   ஈ) ஆறுதலடைவார்கள்



5. சரியா? தவறா?
பிரசங்கி 7:2-4 வசனங்களில் சாலமோனும் துயரத்தை குறித்து இயேசு கூறுவதை ஏற்றுகொள்கிறார்.

6. சரியா? தவறா?
துயரம் அவிசுவாசத்தை குறிக்கிறது.

7. சரியா? தவறா?
துயரப்பட்டதினால் யோபு வாழ்க்கையைக் குறித்த சரியான கேள்வியை கேட்டு, தேவனிடமிருந்து பதிலை தேடி பெற்று கொண்டான்.

8. நாம் நேசிக்கிறவர்கள் மரணமடைவதால் துயரம் ஏற்படும்போது, நாம் ஆசீர்வதிக்கப்படுகிறோம் என்று எண்ணுவது **“இயற்கைக்கு புறம்பானது”.** பவுல் துயரப்படுவது சரி என்று கூறுகின்றார். (1தெச 4:13-14) ஆனால் நமது துயரம் எவ்விதத்தில் மாறுபட்டதாய் இருக்க வேண்டும்?
...........................................................................................................................

9. நன்றாக யாவருக்கும் தெரிந்த 23 வது சங்கீதம் மரணத்தையும் நித்திய வாழ்வையும் நாம் எவ்வாறு சந்திக்க வேண்டும் என்பதற்கான பதிலை தருகிறது. 23 வது சங்கீதத்தை வாசித்து விட்டு கீழ்கண்ட கேள்விகளுக்கு பதிலளிக்கவும்.
   1. உன்னுடைய மேய்ப்பன் யார்?
   ..........................................................................
   2. உன்னுடைய தேவைகளை சந்திப்பது யார்?
   ..........................................................................
   3. உன்னுடைய ஆத்துமாவை காப்பது யார்?
   ..........................................................................
   4. உன்னை சரியான பாதையில் நடத்தி செல்வது யார்?
   ..........................................................................
   5. மரண நேரத்திலும் உன்னோடு கூட இருப்பது யார்?
   ..........................................................................
   6. உன்னை ஆறுதல்படுத்துவது யார்?
   ..........................................................................
   7. உனக்காக ஓர் இடத்தை ஆயத்தம் செய்வது யார்?
   ..........................................................................
   8. உன் தலையை அபிஷேகம் செய்வது யார்?
   ..........................................................................
   9. உன்னை நிரம்பி வழிய ஆசீர்வதிப்பது யார்?
   ..........................................................................
   10. நித்திய காலமாய் உன்னோடு ஜீவிப்பது யார்?
   ..........................................................................

10. மரணம் மற்றும் உயிர்த்தெழுதலைக் குறித்து 23 வது சங்கீதம், மற்றும் பல வேத பாகங்களின் அடிப்படையில் ஒரு விசுவாசியின் மரணத்தை மற்றொரு விசுவாசி எவ்விதமாக உணருகிறார்? உன்னுடைய மரணத்தைக் குறித்து உன்னுடைய எண்ணம் என்ன? உன்னுடைய பதில்களை தடித்த எழுத்துக்களில் காட்டவும். ஒரு அவிசுவாசி உணர்வு எப்படியிருக்கும் என்பதை கோடிட்டு காட்டவும்.

| | | |
|---|---|---|
| நம்பிக்கை | ஆர்வம் | பயம் |
| குழப்பம் | பாதுகாப்பு | நேசிக்கப்படுதல் |
| அமைதி | சாந்தம் | அழிந்து போதல் |
| பயமுறுத்தல் | அலட்சியம் | ஆறுதல்படுத்துதல் |
| பாதுகாப்பு | நம்பிக்கையுள்ள | அதைரியப்படுத்துதல் |

கிறிஸ்துவைப் பின்பற்றுகின்ற பல மனிதர்கள், தாங்கள் தேவனை விசுவாசிப்பதாகவும் அவரைக்குறித்து நன்றாக அறிந்திருப்பதாகவும் கூறுவார்கள். ஆனால் தேவன் மாத்திரமே ஆறுதல்படுத்தக்கூடிய துயரத்தை அவர்கள் அனுபவித்திருக்கும் வரை அவர்கள் உண்மையில் தேவனை அறிந்திருக்க முடியாது. தங்களை ஆறுதல்படுத்தக் கூடியவரை கண்டுபிடிக்கும்படி அவர்கள் விரட்டப்படும்போது, அவர்கள் தேவனோடு ஆழ்ந்த உறவு கொள்கிறார்கள். தேவனோடு கூட நெருங்கும்படி, உங்களை துயரப்படுத்திய சம்பவம் உங்கள் வாழ்க்கையில் இடம் பெற்றுள்ளதா? அதனை விளக்கமாக கூறுக.

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

## சாந்தகுணமுள்ளவர்கள்

### கேட்பொலி பாடம்: மலைப் பிரசங்கம் பாடம் 4

சாந்தம் என்பது பலவீனம் என்பது அல்ல. வலிமையுள்ள ஒரு குதிரை தன்னுடைய எஜமானனிடம் சாதுவானதாக அல்லது சாந்தமாக காணப்படலாம். ஆனால் தேவைப்படும்போது தன்னுடைய வீரியம் முழுமையையும் உபயோகப்படுத்த ஆயத்தமாக இருக்கும். இயேசு தன்னைக் குறித்து கூறும்போது "நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்" என்று மத்தேயு 11:29 வது வசனத்தில் கூறுகின்றார். அதினால் அவர் பலவீனமானவர் என்பதல்ல. எண்ணாகமம் 12:3 ஆம் வசனத்தில் "மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்த குணமுள்ளவனாயிருந்தான்" என்று வேதாகமம் கூறுகின்றது. என்றபோதிலும் வாக்குதத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு இலட்சகணக்கான மக்களை பலவிதமான சோதனைகளின் மத்தியிலும் வழிநடத்தி செல்லகூடிய அளவிற்கு பலமுள்ளவனாக இருந்தான். சாந்தம் என்பது கட்டுக்குள் அடங்கிய வல்லமை - தன்னுடைய எஜமானனின் விருப்பத்திற்கு இணங்கியது. சாந்தம் என்பது நமது மனோசக்தி ஒழுங்குமுறைகளுக்கு உட்பட்டு இருப்பது. புதிய ஏற்பாட்டின் கிரேக்க மொழி பெயர்ப்பில் சீடன் என்பதும் ஒழுக்கம் என்பதும் ஒரே கிரேக்க வார்த்தையிலிருந்து தோன்றியுள்ளது. சீடனாயிருப்பதற்கு ஒழுக்கம் மிகவும் தேவையானது. தகப்பனின் நுகத்தின் கீழ் வாழ்வது (மத்தேயு 11: 28-30)

1. மூன்றாவது பாக்கியம் "சாந்த குணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியை சுதந்தரித்து கொள்வார்கள் " (மத்தேயு 5:5)
   (தெரிந்தெடு : பலம், கொடுத்தல், சாந்தம், சம்பாதி, சுதந்தரி)

2. சாந்தம் என்பதற்கான மற்றொரு வார்த்தை (கோடிடவும்)
   அ) பலவீனமான மனோசக்தி
   ஆ) எதிர்க்காத
   இ) நொறுங்குண்ட
   ஈ) வெட்கம்



3. இயேசு கூறியதின்படி சாந்தகுணமுள்ளவர்களுக்கு கொடுக்கப்பட்ட வாக்குதத்தம்
   அ) பரலோகத்தை சுதந்தரிப்பார்கள்
   ஆ) உலகத்தை ஆதாயப்படுத்தி கொள்வார்கள்
   இ) பூமியை சுதந்தரித்து கொள்வார்கள்
   ஈ) பரலோகத்தில் தேவன் தங்களை ஆசீர்வதிக்கும்படி காத்திருக்க வேண்டும்

4. வேதாகமத்தில் "நொறுக்கப்பட்டு" சாந்தகுணமுள்ளவர்களாக காணப்படுகின்றவர்களின் பெயர்களை கூறுக
   மோசே (எண். 12:3)
   ஏசாயா (ஏசாயா 6:5)
   பேதுரு (யோவான் 21:17)
   பவுல் (அப். 9:4-6)

5. மேலே குறிப்பிட்ட பெயர்களில் பலவீனமானவர்களின் பெயர்களை குறிப்பிடுக

6. கீழே குறிப்பிடப்பட்டுள்ள வசனங்களில் "சாந்தம்" என்பதற்கு பதிலாக "மனத்தாழ்மை" என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு வசனத்தையும் வாசித்து, கொடுக்கப்பட்டுள்ள கேள்விக்கான விடையளிக்கவும்.

   சங்கீதம் 25:9 சரியா? தவறா?
   சாந்தகுணமுள்ளவர்களை நியாயத்திலே நடத்தி, சாந்தகுணமுள்ளவர்களுக்கு தமது வழியைப் போதிக்கிறார்.

   சங்கீதம் 37:11 சரியா? தவறா?
   சாந்தகுணமுள்ளவர்கள் எப்போதும் பலமுள்ளவர்களால் அதிகம் துன்புறுத்தப்படுகிறார்கள்.

   மத்தேயு 21:4 சரியா? தவறா?
   இராஜாக்கள் பலமுள்ளவர்களாகவும் சாந்த குணமுடையவர்களாகவும் இருக்க முடியும் என்று இயேசு மெய்ப்பித்து காட்டினார்.

7. மத்தேயு 11:28-30 பகுதியை வாசிக்கவும். இயேசு தன்னுடைய நுகத்தை ஏற்று கொள்ளும்படி யாரை அழைத்தார்?
   அ) வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களை
   ஆ) பலமுள்ளவர்களை
   இ) அவருக்காக உழைக்க ஆயத்தமாயிருக்கிறவர்களை
   ஈ) தங்கள் வாழ்க்கையை மாத்திரம் நடத்தி செல்லுபவர்களை

8. நீங்கள் சுமக்கக்கூடாத அளவிற்கு பாரமான சுமை உள்ளதா? உள்ளதென்றால் அதனை குறிப்படுக
   ..........................................................................................
   ..........................................................................................
   ..........................................................................................

உங்கள் வாழ்க்கை எவ்விதமான சவால்கள் நிறைந்ததாக இருந்தாலும், சாந்தம் எவ்விதமாக உங்கள் நுகத்தை மெதுவானதாகவும் வாழ்க்கையை இலகுவானதாகவும் மாற்றுகிறது ?

..........................................................................................

## நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்கள்

### கேட்போலி பாடம்: மலைப் பிரசங்கம் பாடம் 5

சாந்தகுணமுள்ளவர்களாக நாம் தேவனுடைய வழிநடத்துதலை தேடும்போது, நீதியின் மேல் பசிதாகம் ஏற்படுகிறவர்களாக இருக்கிறோம். தேவனை பிரியப்படுத்தும் விதமாக நமது வாழ்க்கையை நடத்த வேண்டும் என்ற விருப்பம் உண்டாகிறது. எது சரியானது என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறோம். எது சரியானதோ அதையே செய்கிறோம். நீங்கள் எதை செய்கிறீர்கள், அதை எவ்விதமாக செய்கிறீர்கள் என்பது தேவனுக்கு மிகவும் முக்கியமானது. எது செம்மையானதோ அதை செய்யவே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம் - சூழ்நிலைக்கு ஏற்றவாறு அமைந்துள்ளதையல்ல.

1. இரண்டாவது பாக்கியம் “நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் திருப்தியடைவார்கள்” (மத்தேயு 5:5)
   தெரிந்தெடு: (நல்ல எண்ணம், செல்வம், நிரப்புதல், வெற்றி, நீதி)

2. இயேசு எவ்விதமான நீதியைக் குறித்து பேசுகிறார்?
   (சரியான ஒன்றை கோடிட்டு காட்டவும்)
   அ) தேவனின் நீதி நியாயம்
   ஆ) எது சரியோ அதனை செய்வது
   இ) நேர்மை
   ஈ) மேலே கூறப்பட்ட அனைத்தும்

3. நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்களுக்கு இயேசு கூறிய வாக்குதத்தம் என்ன?
   (சரியான ஒன்றை கோடிட்டு காட்டவும்)
   அ) அவர்கள் இனி ஒருபோதும் பாவம்செய்வது இல்லை
   ஆ) அவர்கள் மற்றவர்களைக் காட்டிலும் நீதியுள்ளவர்களாய் இருப்பார்கள்
   இ) அவர்கள் திருப்தியடைவார்கள்
   ஈ) தாங்கள் செய்த வேலைகளுக்கான சன்மானம் அவர்களுக்கு கொடுக்கப்படும்.

4. சரியா? தவறா? சரியானவற்றை மாத்திரம் செய்ய வேண்டுமென்ற விருப்பம், தவறானவற்றை திருத்தி கொள்ள வேண்டும் என்ற விருப்பத்தையும் கொடுக்கிறது.

5. சரியா? தவறா? இந்த பாக்கியத்தை இவ்விதமாகவும் கூறலாம். “மகிழ்ச்சியின் மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் மகிழ்ச்சியடைவார்கள்”.

6. மத்தேயு 6:33 வது வசனத்தில் எதற்கு முதலிடம் கொடுத்து பட்டியலிட வேண்டும் என்பதற்கு இயேசு வழிகாட்டுகிறார். இந்த வசனத்தின்படி நம்முடைய வாழ்க்கையில் நீதி எந்த இடத்தில் இருக்க வேண்டும்?

7. 1பேதுரு 2: 24 வது வசனத்தை வாசிக்கவும். இந்த வசனத்தின்படி இயேசு ஏன் நமது பாவங்களுக்காக மரித்தார்?
   அ) நீதிக்கு பிழைத்திருக்கும்படிக்கு
   ஆ) நாம் பாவங்களுக்கு சாகும்படிக்கு
   இ) அ, ஆ இரண்டும்
   ஈ) அ வும் அல்ல ஆ வும் அல்ல



8. ஏசாயா 61:3 ஐ வாசிக்கவும். இந்த வசனத்தின்படி, ஏன் நாம் நீதியுள்ளவர்களாயிருக்கும்படி அழைக்கப் பட்டிருக்கிறோம்.
   அ) மற்றவர்களும் நீதியுள்ளவர்களாயிருக்கும்படி
   ஆ) தேவனுக்கு நம்பிக்கையுள்ளவர்களாயிருக்கும்படி
   இ) ஏனென்றால் கீழ்ப்படியும்படி தேவன் கட்டளை கொடுத்திருப்பதால்
   ஈ) தேவன் மகிமைப்படும்படியாக

9. சங்கீதம் 4:5 ஐ வாசிக்கவும். இந்த வசனத்தில் நீதி எதனுடன் சம்பந்தப்பட்டது என்பதைக் கோடிட்டு காட்டவும்.
   அ) நம்பிக்கை
   ஆ) கீழ்ப்படிதல்
   இ) ஆராதனை
   ஈ) ஊக்கம்

நீதியுள்ள வாழ்க்கை வாழ்வதற்கு உங்கள் வாழ்க்கையிலுள்ள சவால்கள் என்ன? இந்த சவால்களைக் குறித்து நீங்கள் செய்யும்படி தேவன் விரும்புவது என்ன?

.......................................................................................................................

.......................................................................................................................

ஒவ்வொரு சிந்தைக்கும் கொடுக்கப்பட்ட வாக்குதத்தத்தை பொருத்துக:

| | |
|---|---|
| ஆவியில் | பூமியை சுதந்தரித்து |
| எளிமையுள்ளவர்கள் | கொள்வார்கள் |
| துயரப்படுகிறவர்கள் | திருப்தியடைவார்கள் |
| சாந்தகுணமுள்ளவர்கள் | ஆறுதலடைவார்கள் |
| நீதியின் மேல் | பரலோக ராஜ்யம் |
| பசிதாகமுள்ளவர்கள் | அவர்களுடையது |